# இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டுப் பணியகம் - 2012

## 1. நிதிசார்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளிற்கான நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | இலங்கை கணக்கீட்டு நியமத்துடனான தொடர்பு | தேவை | இணங்காமை |
|---|---|---|---|
| கையிருப்புகள் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பிரிவு 13 | ஒரு நிறுவனம் கையிருப்புகளை குறைந்த கிரயத்திலும் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலும் அளவிடவேண்டும். இது பூர்த்தி செய்யப்பட்டு | (i) அசைவற்ற ரூபா 2,034,054 பெறுமதியான 27 பொருட்கள் கணக்கிற்குள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

விற்பனை செய்யப்படுவதற்குக் குறைந்த கிரயத்தில் அமைய வேண்டும்.

(ii) 2012 ஆம் ஆண்டினது ரூபா 419,556 க்கான முகாமைத்துவ டயறிகள் பெறுமதி பொருளிருப்புகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நன்கொடைகளாகிய ரூபா 1,128,000 நன்கொடையாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக வர்த்தகத் தொடர்புடைய செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஆ) 2010 ஒக்டோபர் 11 ஆந் திகதிய மு.க.அ/1/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக கணிப்பீட்டுத் தவறின் காரணமாக உத்தியோகத்தர் ஒருவருக்கு வெளிநாட்டுப் பயணப் படியாக ரூபா 149,265 மேலதிகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கட்டுப்பாட்டுக் கணக்கின் விபரம் | கணக்கின் பிரகாரமான மீதி | உப பதிவேட்டு விபரம் | உப பதிவேட்டின் பிரகாரமான மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா |
| இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டியது | 24,371,043 | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை | 26,948,539 | 2,577,496 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இறுதிக் கணக்குகள் | | |
| இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 54,179 | இலங்கை சுற்றுலாத்துறை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவக இறுதிக் கணக்குகள் | 44,484 | 9,695 |
| இலங்கை சுற்றுலாத்துறை ஹோட்டல் முகாமைத்துவத்திற்கு செலுத்த வேண்டியவை | இல்லை | இலங்கை சுற்றுலாத்துறை ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவகத்தின் இறுதிக் கணக்குகள் | 4,417,949 | 4,417,949 |

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையே 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளுக்கான கடன்கொடுத்தோர் தொகையாகிய ரூபா 2,827,822 மற்றும் ரூபா 8,980,922 என்பன தீர்த்து வைக்கப்படவில்லை.

(ஆ) சர்வதேச இந்திய திரைப்பட விருது விழா அமைப்பு நிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய தொகை சொல்லப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறவேண்டியதாகக் கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குக் கிடைப்பதற்கிருந்த தகவல்களின் பிரகாரம், மேற்படி நிறுவனத்திற்காகப் பணியகம் வழங்கிய ஹோட்டல் அறை வசதிகளுக்கு கிட்டத்தட்ட ரூபா 20 மில்லியன் மேற்படி நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் இன்மையால் அவற்றைக் கணக்காய்விச் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

| | விபரம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|---|
| (அ) | வருகை தரும் பத்திரிகையாளருக்கான நிகழ்ச்சித் திட்டம் | 26,438,483 | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களது எண்ணிக்கையும் ஊடகப் பிரசுர விபரங்களும் |
| (ஆ) | வர்த்தகக் கண்காட்சி இன்டர் நெஷனல் டிரவல் போர்ஸ் | 32,565,827 | விபரமான பட்டோலை |
| (இ) | வர்த்தகக் கண்காட்சி உலக பயணச் சந்தை | 29,868,208 | விபரமான பட்டோலை |
| (ஈ) | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் செய்யப்பட்ட மேம்பாட்டுச் செலவினம் | 55,427,296 | பற்றுச் சீட்டுக்கள் |
| (உ) | முற்கொடுப்பனவுகள் | 2,808,927 | உறுதிப்படுத்தல் |
| (ஊ) | பெறவேண்டியவை | 481,324,185 | உறுதிப்படுத்தல் |
| (எ) | பொருளிப்புகள் | 291,912 | பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச்சட்டத்தின் vii ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவின் 09 ஆம் உப பிரிவு | ஒவ்வொரு ஆண்டினதும் மூன்று மாதகாலப் பூர்த்திக்கு முன்னரே பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்குப் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br>(அ) ஒரு பஞ்சாங்க ஆண்டின் ஏழு மாதகாலப் பூர்த்திக்கு முன்னரான அரையாண்டுக் கணக்குகளது பிரதியொன்று<br><br>(ஆ) முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் தொடர்பாக எய்தப்பெற்றனவும் செயலாற்றலும் அடங்கிய கூற்று ஒன்று |
| (ஆ) 2003 ஜூன் 2 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க நல்ல ஆளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்கள் | |
| (i) அத்தியாயம் 5 பிரிவு 5.1.3 | நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் சபையால் அங்கீகரிக்கப்பட்டதும் நாளதுவரையாக்கப்பட்டதுமான கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பணியகம் இவ் வேண்டுகையுடன் இணங்கி நடக்க தவறியிருந்தது. |

(ii) அத்தியாயம் 9

பிரிவு 9.12

நிறுவனம் ஒன்றினால் கடைப்பிடிக்கப்படும் எந்தவொரு நலன்புரித் திட்டமும் பொதுத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஊழியர் வைத்திய காப்புறுதித் திட்டத்திற்கான அங்கீகாரத்தைப் பணியகம் இதற்கேற்பப் பெறத்தவறியிருந்தது.

(iii) அத்தியாயம் 9

பிரிவு 9.14.1

மனிதவள முகாமைத்துவம் தொடர்பான சகல விதிகளும் பிரமாணங்களும் திறைசேரிச் செயலாளரின் இசைவுடன் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும், பணியகமானது இத்தேவைகளுக்கேற்ப நடக்கவில்லை.

(இ) 2006 ஜனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவர் சுற்றறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தினது 4.2.1(அ) மற்றும் (இ) பிரிவுகள்

அடுத்துவரும் ஆண்டிற்காக விரிவான திட்டத்துடன் குறைந்தது மூன்று ஆண்டுகளையாவது உள்ளடக்கும் விதத்தில் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமாயினும், வேண்டப்பட்டவாறு அத்தகைய திட்டத்தைப் பணியகம் தயாரிக்கவில்லை.

(ஈ) 2011 ஜனவரி 11 ஆந் திகதிய PED/56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

அரச நிறுவனங்கள் மிகையாக உள்ள பணம் அடுத்துவரும் 6 மாதங்களுக்குத் தேவையான தொழிற்படு மூலதனத்தைக் கருத்திற்கொண்டதன் பின்னர் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும்.

எனினும், அவ்வாறாக மிகையாக உள்ள பணத்தைப் பணியகம் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் பிரகாரம், மீளாய்வாண்டில் பணியகத்தின் மிகையாக உள்ள பணம் ஏறக்குறைய ரூபா 1,000 மில்லியன் ஆகும்.

| | | |
|---|---|---|
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திதகதிய 1A1/2002/2 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு, பணியகத்திற்கு சொந்தமான கணனிகள், கணனித் துணைப் பாகங்கள், மென் அணி என்பவற்றிற்கான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |
| (ஊ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய PED/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சகல பொது முயற்சிகளும் ரூபா 100,000 க்கு மேற்பட்ட நன்கொடை/ உதவுதொகை என்பவற்றிற்கு மாண்புமிகு நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு அங்கீகாரத்தைப் பெறாது மீளாய்வாண்டின்போது இரு தனியார் நிறுவனங்களுக்கு ரூபா 1,128,000 நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற பணியகத்தின் செயற்பாட்டினால் விளைந்த மிகை ரூபா 476,209,102 ஐ இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 551,545,914 உடன் ஒப்பிடலாம். இது நிதிசார் விளைவுகளில் ரூபா 75,336,812 குறைவைக் காட்டுகின்றது. நிதிசார் விளைவுகளின் குறைவுக்கான முக்கிய காரணம் உள்ளூர் வர்த்தக ரீதியான செலவினது 279,333,441 ரூபா அதிகரிப்பே ஆகும்.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டின் ரூபா 1,248 மில்லியனுடன் ஒப்பிடப்பட்டவாறான மீளாய்வாண்டிற்கான பணியகத்தின் வருமானம் ரூபா 1,444 மில்லியனாகும். இது 15.7 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. அதேவேளையில், மீளாய்வாண்டின் வர்த்தகத் தொடர்புடைய மற்றும் சந்தைப்படுத்தல், மேம்பாட்டு நடவடிக்கைகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டின் தொகை ரூபா 697 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 968 மில்லியன் ஆகும். இது 39 சதவீத அதிகரிப்பைச் சுட்டிக் காட்டுகின்றது.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சில குறிப்பிடத்தக்க விகிதங்கள் பின்வருமாறு.

| உரிமை மூலதன விகிதம் | நியம விகிதம் | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1 | 2:84 | 3:28 | 2:47 |
| விரைவு விகிதம் | 1:1 | 2:83 | 3:25 | 2:45 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது ரூபா 876 மில்லியன் வர்த்தகத் தொடர்புடைய செலவின் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், எதிர்பார்த்தவாறு சுற்றுலாப் பயணிகளின் வருகை அமையவில்லை. விபங்கள் கீழே தரப்படுகின்றன.

| நாடு | 2012 ஏற்பட்ட மொத்தச் செலவினம் | 2012 சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வளர்ச்சி | 2011 ஏற்பட்ட மொத்தச் செலவினம் | 2011 சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வளர்ச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | % | ரூபா | % |
| ஐக்கிய இராச்சியம் | 101,492,242 | 7.7 | 113,372,372 | 0.6 |
| ஜேர்மனி | 39,246,721 | 28.2 | 43,302,313 | 22.2 |
| பிரான்ஸ் | 20,545,444 | 16.8 | 20,016,035 | 55.6 |
| ரஷ்யா | 25,927,841 | 32.8 | 30,991,787 | 61.1 |
| நெதர்லாந்து | 4,044,308 | 11.6 | 7,186,800 | 34.2 |
| இந்தியா | 9,812,701 | 2.9 | 835,974 | 35.1 |
| சீனா | 345,319,913 | 58.1 | 12,859,576 | 56.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஜப்பான் | 15,923,952 | 26.7 | 8,018,073 | 43.7 |
| மத்திய கிழக்கு நாடுகள் | 30,521,920 | -0.3 | 14,153,406 | 53.2 |
| மலேசியா | இல்லை | 35.3 | இல்லை | 20.4 |
| சுவிற்சலாந்து | இல்லை | 42.1 | இல்லை | 49.7 |

(ஆ) வருகை தரும் பத்திரிகையாளருக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் பொதுவாக அறிந்துகொள்ளுதற்கான சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களும்.

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது மேற்படி நிகழ்ச்சித்தித் திட்டங்களுக்கு ரூபா 26.43 மில்லியன் செலவிடப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டிற்கு அதிகூடிய நலன்களை எய்தக்கூடியவாறான பொருத்தமான, சாதகமான பத்திரிகையாளர்களைத் தெரிவு செய்வதை வலியுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களது எண்ணிக்கை நிரலிடப்படாமையால் முறையான ஊடகத் தெரிவுத்திட்டங்களது அங்கொன்றும் இங்கொன்றுமாக இந் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் போது 181 பத்திரிகையாளர்கள் 57 ஊடகங்களைப் பொதுவாக அறிந்து கொள்வதற்காக பங்குபற்றியிருந்தனர். எவ்வாறாயினும், எதிர்பார்த்த பலனை அடைவதற்குப் பத்திரிகையாளர்களை தெரிவு செய்யும் தெரிவு நியமம் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) எதிர்பார்த்தவாறு, நிகழ்ச்சித்திட்டங்களினூடாக ஈடேற்றிய ஊடக பிரசுரங்கள் தொடர்பாகச் சான்றெதுவும் கணக்காய்விற்கு கிடைக்குமாறு செய்யப்படவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் 45 சதவீதத்திற்கு மேற்பட்ட பதவிகளில் வெற்றிடங்கள் நிலவின. மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் மனிதவளம் மீதான

மொத்தக் கிரயம் முறையே ரூபா 28.6 மில்லியன் மற்றும் ரூபா 25.8 மில்லியன் ஆகவிருந்தன. மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டிலும் ஊழியர் ஒருவருக்கான கிரயம் முறையே ரூபா 622,400 மற்றும் ரூபா 562,874 ஆக இருந்ததை இது சுட்டிக்காட்டியது.

(ஆ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச் சட்டத்தின் VII ஆம் பிரிவின் பிரகாரம் தேவையை கருத்திற் கொள்ளாது பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

**3.3 வாகனப்பாவனை**

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இரண்டு வாகனங்களை வாடகைக்குப் பெறுவதற்கு ரூபா 6,591,906 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வாடகை வாகனங்களது கிலோ மீட்டர் ஒன்றிற்கான கிரயம் 56.32 ஆகும்.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வாடகை வாகனக்கிரயம் ரூபா 4,237,828 அல்லது 180 சதவீதத்தால் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

**4. கணக்களிதகைமையும் சிறந்த ஆளுமையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீடு தயாரிக்கப்பட்ட போதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 38 ஆம் இலக்கத்தின் 8(1) பிரிவின் பிரகாரம் நிதியாண்டிற்கு 3 மாதங்களுக்கு முன்னரே சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் பாதீட்டிற்கும் உள்ளவற்றிக்கும் இடையே 22 விடயங்களில் 7 சதவீதம் முதல் 1331 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமையை இது சுட்டிக்காட்டுகின்றது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் நிதியதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் தலைவருக்கு வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் கவணத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) மேம்பாட்டு நடவடிக்கைகள்
(இ) பாதீடு
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) கொள்வனவு
(ஊ) உள்ளகக் கணக்காய்வு